**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சங்கரன்கோவில்**

**முன்னிலை : செல்வி. G.பவித்ரா, L.L.M.,**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, சங்கரன்கோவில்.**

**நீதித்துறை நடுவர், சங்கரன்கோவில் (மு.கூ.பொ)**

M.P.No.4/2026

in

C.C.No. 572/2025

**<u>கரிவலம்வந்தநல்லூர் காவல் நிலைய குற்ற எண்.186/23</u>**

**<u>இ.த.ச.பிரிவு 379(Sand)</u>**

**உத்தரவு நாள்: 27.02.2026**

=

கருப்பசாமி,
த/பெ. முருகன்

... மனுதாரர்/எதிரி

/எதிர்/

காவல் உதவி ஆய்வாளர்,
கரிவலம்வந்தநல்லூர் காவல் நிலையம்
குற்ற எண்.186/2023

... எதிர்மனுதாரர்/வாதி

**<u>மனுநாள்: 25.02.2026 மனு 480 BNSS</u>**

இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அரசு தரப்பு பதில் பெறப்பட்டது.

2. மனுதாரர்/எதிரி தரப்பில், மனுதாரர்/எதிரி 17.11.2025 முதல் காவலில் இருந்து வருவதாகவும், அவர் மீது பொய் வழக்கு போடப்பட்டுள்ளதாகவும், அவர் கூலி வேலை செய்து வருபவர் என்றும், அவர் நிரந்த முகவரி உடையவர் என்றும், அவர் நீதிமன்ற நிபந்தனைக்கு கட்டுப்படுவார் என்றும், எதிரியை பிணையில் விடுவிக்கும்பட்சத்தில் தகுந்த பிணையதாரர்களை வழங்குவதாகவும், எனவே மனுதாரர்/எதிரியை பிணையில் விடுவிக்க உத்தரவிட வேண்டுவதாக எடுத்துரைக்கப்பட்டது. எனவே மனுதாரர்/எதிரியை பிணையில் விடுவிக்க உத்தரவிட வேண்டுவதாக எடுத்துரைக்கப்பட்டது.

3. அரசு தரப்பில், கரிவலம்வந்தநல்லூர் காவல் நிலையம் காவல் நிலைய குற்ற எண். 186/2023 இ.த.ச.பிரிவு 379(Sand) சி.சி.572/2025 வழக்கில் ரிமாண்ட் செய்யப்பட்டு, சிறையில் உள்ளார் என்றும், மேற்படி வழக்கின் எதிரியை பிணையில் விடும்பட்சத்தில், திரும்ப திரும்ப இதுபோன்ற குற்றச் செயல்களில் ஈடுபடக்கூடும் என்பதாலும், எதிரி வெளியூர் மற்றும் வெளி மாநிலங்களுக்குச் சென்று தலைமறைவாகக்கூடும் என்பதாலும், சாட்சிகளை கைலக்கக்கூடும்

என்பதாலும், மேலும், எதிரிக்கு கரிவலம்வந்தநல்லூர் காவல் நிலைய குற்ற எண். 252/2024 இ.த.ச. பிரிவு 452, 6 r/w 5(l), 5(j)(ii) of POCSO Act வழக்கு நிலுவையில் உள்ளது என்றும், மேலும், எதிரி தொடர்ந்து குற்றச் செயல்களில் ஈடுபடக்கூடும் என்பதாலும், எனவே, மேற்படி எதிரியை ஜாமீனில் வெளியே விட கடுமையான ஆட்சேபணை தெரிவிப்பதாக எடுத்துரைக்கப்பட்டது.

4. இரு தரப்பும் கேட்கப்பட்டன. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கு ஆவணங்களை பரிசீலிக்கப்பட்டதில், மனுதாரர்/எதிரியானவர் 103 நாட்களாக காவலில் இருந்து வருகிறார் என்று தெரிய வருகிறது. இவ்வழக்கின் சொத்து கைப்பற்றப்பட்டுவிட்டதாக எதிர்மனுதாரர் தரப்பில் தெரிவித்துள்ளதைக் கருத்தில் கொண்டும், இவ்வழக்கின் எதிரி புலன் விசாரணைக்கு ஒத்துழைப்பு தருவார் என்று கருதியும், மேலும், எதிரியை பிணையில் விடுவது எந்த விதத்திலும் அரசு தரப்பு வழக்கை பாதிக்காது என்று கருதியும், இந்த வழக்கின் தன்மை மற்றும் நீதியின் நலனைக் கருத்தில் கொண்டு மனுதாரர்/எதிரியை பிணையில் கீழ்க்கண்ட நிபந்தனைகளின் பேரில் விடுவிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. நிபந்தனைகள் :–

1. மனுதாரர்/எதிரி தானும், தனி இரு நபர்களும் தலா ரூ.10,000/–த்திற்கு பிணைப்பத்திரம் இயற்றித் தரவேண்டும். மேற்குறிப்பிட்ட இரு நபர்களுள் ஒருவரேனும் சங்கரன்கோவில் நீதித்துறை நடுவர் நீதிமன்ற அதிகார வரம்பிற்குள் நிரந்தர வசிப்பிடம் கொண்டவராக இருக்க வேண்டும்.
2. மனுதாரர் / எதிரி புலன் விசாரணைக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.
3. மனுதாரர் / எதிரி பிணையில் வெளிவந்த பிறகு எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் காலை 10.00 மணி ஆஜராகி 30 நாட்களுக்கு தொடர்ந்து கையொப்பமிட வேண்டும்.

PAVITHRA G

Digitally signed by PAVITHRA G
Date: 2026.02.27 16:45:02 +0530

நீதித்துறை நடுவர், (மு.கூ.பொ),
சங்கரன்கோவில்.